ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# பெரியாழ்வார் அருளிச்செய்த பெரியாழ்வார் திருமொழி

# 2.9 – வெண்ணெய்விழுங்கி

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness  śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 2.9 – வெண்ணெய்விழுங்கி

‡ வெண்ணெய் விழுங்கி வெறுங்கலத்தை வெற்பிடை இட்டு ⋆
அதன் ஓசை கேட்கும் ⋆
கண்ண பிரான் கற்ற கல்வி தன்னைக் ⋆
காக்ககில்லோம் உன் மகனைக் காவாய் ⋆
புண்ணில் புளிப் பெய்தால் ஒக்கும் தீமை ⋆
புரை புரையால் இவை செய்ய வல்ல ⋆
அண்ணற் கண்ணான் ஓர் மகனைப் பெற்ற ⋆
அசோதை நங்காய் ! உன் மகனைக் கூவாய் ‖ **2.9.1** ‖

வருக வருக வருக இங்கே ⋆
வாமன நம்பீ ! வருக இங்கே ⋆
கரிய குழல் செய்ய வாய் முகத்துக் ⋆
காகுத்த நம்பீ ! வருக இங்கே ⋆
அரியன் இவன் எனக்கின்று நங்காய் ! ⋆
அஞ்சன வண்ணா ! அசல் அகத்தார் ⋆
பரிபவம் பேசத் தரிக்ககில்லேன் ⋆
பாவியேனுக்கிங்கே போதராயே ‖ **2.9.2** ‖

திருவுடைப் பிள்ளை தான் தீயவாறு ⋆
தேக்கம் ஒன்றும் இலன் தேசுடையன் ⋆
உருக வைத்த குடத்தொடு வெண்ணெய் ⋆
உறிஞ்சி உடைத்திட்டுப் போந்து நின்றான் ⋆
அருகிருந்தார் தம்மை அநியாயம் செய்வது தான் ⋆

வழக்கோ அசோதாய் ! ⋆
வருக என்றுன் மகன் தன்னைக் கூவாய் ⋆
வாழ ஒட்டான் மதுசூதனனே ॥ **2.9.3** ॥

கொண்டல் வண்ணா ! இங்கே போதராயே ⋆
கோயிற் பிள்ளாய் ! இங்கே போதராயே ⋆
தெண் திரை சூழ் திருப்பேர்க் கிடந்த ⋆
திருநாரணா ! இங்கே போதராயே ⋆
உண்டு வந்தேன் அம்மம் என்று சொல்லி ⋆
ஓடி அகம் புக ஆய்ச்சி தானும் ⋆
கண்டெதிரே சென்றெடுத்துக் கொள்ளக் ⋆
கண்ண பிரான் கற்ற கல்வி தானே ॥ **2.9.4** ॥

பாலைக் கறந்தடுப்பேற வைத்துப் ⋆
பல்வளையாள் என் மகள் இருப்ப ⋆
மேலை அகத்தே நெருப்பு வேண்டிச் சென்று ⋆
இறைப்பொழுதங்கே பேசி நின்றேன் ⋆
சாளக்கிராமம் உடைய நம்பி ⋆
சாய்த்துப் பருகிட்டுப் போந்து நின்றான் ⋆
ஆலைக் கரும்பின் மொழி அனைய ⋆
அசோதை நங்காய் ! உன் மகனைக் கூவாய் ॥ **2.9.5** ॥

போதர் கண்டாய் இங்கே போதர் கண்டாய் ⋆
போதரேன் என்னாதே போதர் கண்டாய் ⋆
ஏதேனும் சொல்லி அசல் அகத்தார் ⋆
ஏதேனும் பேச நான் கேட்க மாட்டேன் ⋆
கோதுகலம் உடைக் குட்டனேயோ ! ⋆
குன்றெடுத்தாய் ! குடம் ஆடு கூத்தா ! ⋆

வேதப் பொருளே ! என் வேங்கடவா ! ⋆
வித்தகனே ! இங்கே போதராயே ‖ **2.9.6** ‖

செந்நெல் அரிசி சிறு பருப்புச் ⋆
செய்த அக்காரம் நறுநெய் பாலால் ⋆
பன்னிரண்டு திருவோணம் அட்டேன் ⋆
பண்டும் இப் பிள்ளை பரிசறிவன் ⋆
இன்னம் உகப்பன் நான் என்று சொல்லி ⋆
எல்லாம் விழுங்கிட்டுப் போந்து நின்றான் ⋆
உன் மகன் தன்னை அசோதை நங்காய் ! ⋆
கூவிக் கொள்ளாய் இவையும் சிலவே ‖ **2.9.7** ‖

கேசவனே ! இங்கே போதராயே ⋆
கில்லேன் என்னாதிங்கே போதராயே ⋆
நேசம் இலாதார் அகத்திருந்து ⋆
நீ விளையாடாதே போதராயே ⋆
தூசனம் சொல்லும் தொழுத்தை மாரும் ⋆
தொண்டரும் நின்ற இடத்தில் நின்று ⋆
தாய் சொல்லுக் கொள்வது தன்மம் கண்டாய் ⋆
தாமோதரா ! இங்கே போதராயே ‖ **2.9.8** ‖

கன்னல் இலட்டுவத்தோடு சீடை ⋆
கார் எள்ளின் உண்டை கலத்தில் இட்டு ⋆
என் அகம் என்று நான் வைத்துப் போந்தேன் ⋆
இவன் புக்கவற்றைப் பெறுத்திப் போந்தான் ⋆
பின்னும் அகம் புக்குறியை நோக்கிப் ⋆
பிறங்கொளி வெண்ணெயும் சோதிக்கின்றான் ⋆

உன் மகன் தன்னை யசோதை நங்காய் !⋆
கூவிக் கொள்ளாய் இவையும் சிலவே ‖ **2.9.9** ‖

சொல்லில் அரசிப் படுதி நங்காய் !⋆
சூழல் உடையன் உன் பிள்ளை தானே⋆
இல்லம் புகுந்தென் மகளைக் கூவிக்⋆
கையில் வளையைக் கழற்றிக் கொண்டு⋆
கொல்லையில் நின்றும் கொணர்ந்து விற்ற⋆
அங்கொருத்திக்கவ்வளை கொடுத்து⋆
நல்லன நாவற் பழங்கள் கொண்டு⋆
நான் அல்லேன் என்று சிரிக்கின்றானே ‖ **2.9.10** ‖

‡ வண்டு களித்திரைக்கும் பொழில் சூழ்⋆
வரு புனல் காவிரித் தென்னரங்கன்⋆
பண்டவன் செய்த கிரீடை எல்லாம்⋆
பட்டர் பிரான் விட்டுசித்தன் பாடல்⋆
கொண்டிவை பாடிக் குனிக்க வல்லார்⋆
கோவிந்தன் தன் அடியார்கள் ஆகி⋆
எண் திசைக்கும் விளக்காகி நிற்பார்⋆
இணை அடி என் தலை மேலனவே ‖ **2.9.11** ‖

அடிவரவு — வெண்ணெய் வருக திரு கொண்டல் பாலை போதர் செந்நெல் கேசவனே கன்னல் சொல்லில் வண்டு ஆற்றிலிருந்து

வெண்ணெய்விழுங்கி முற்றிற்று

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்